செ.வெ.எண்: 25 நாள்: 14.07.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி மூலம் குளிர்சாதன வசதியுடன் கூடிய இலவச அமரர் ஊர்தி வண்டி சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (14.07.2020) துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி மூலம் பொதுமக்களுக்கு பல்வேறு உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்குமுன் கர்ப்பிணித்தாய்மார்களுக்காக 02 தாய்சேய் நல ஊர்தி செயல்பட்டு வருகிறது. இந்த வாகனத்தினை அனுக 102 என்ற எண்ணிற்கு அழைத்தால்போதும். மேலும், இன்று குளிர்சாதன வசதியுடன் கூடிய இலவச அமர்வு ஊர்தி வண்டி சேவை தொடங்கி வைக்கப்பட்டது. இந்த வண்டி இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி மூலம் பராமரிக்கப்பட்டு, அரியலூர் அரசு மருத்துவமனயில் நிறுத்தி வைக்கப்படும். இந்த வாகனத்தின் மூலம் அரசு மருத்துவமனையில் இறந்தவர்களின் உடலை அவர்களது சொந்த ஊருக்கு எடுத்து செல்ல இலவசமாக இந்த வாகனத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம். இந்த வாகனத்தினை அழைக்க 155377 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயினுலாப்தீன், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி தலைவர் முத்துகிருஷ்ணன், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிச்சந்திரன், மாவட்ட ரெட்கிராஸ் சொசைட்டி நிர்வாக தலைவர் அ.நல்லப்பன், செயலாளர் நா.கலையரச்ன, பொருளார் செ.ஜெயராமன் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**